# கவிதைச்சோலை

## வாழிய வாழியவே பெருவுடையார் கோவில்

- சோழமண்டலத்தின் வீரத்தையும்
  தமிழ்எழுத்துக்களின் நாதத்தையும்
  ஒலித்துக்கொண்டு
  ஆயிரம்ஆண்டு கடந்தும்
  நிற்கின்றான்
  இராஜஇராஜன்
  பெருவுடையார் ஆலயமாய்............

- இனிமைத்தமிழை
  மன்னன்
  வாசிக்கவில்லை
  சுவாசித்திருக்கிறான்.............

- அரசாட்சிமுறை அல்லாத
  குடியாட்சியை
  ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே
  அறிமுகப்படுத்தியிருக்கிறான்................

- நான் எனக்கூறாது
  நாம் கொடுத்தனவும் எனக்கூறி
  அரசனையும், மக்களையும்
  சமப்படுத்தியிருக்கிறாய்............

- கொடுப்பார் கொடுத்தனவும் என
  மோர் கொடுத்த
  கடைநிலை ஊழியனையும்
  கணப்படுத்தியிருக்கிறாய்............

- அரசுநாற்காலியில் அமர்ந்தும்
  படாடோபமின்றி ஆன்மீகத்தை
  நாடியிருக்கிறாய்...................

- வாழ்ந்தோம், மரித்தோம்
  என்றல்லாது தமிழை
  உயர்த்தி வாழ்ந்திருக்கிறாய்
  அதனாலே
  வாழ்வாங்கு வாழ்கிறாய்...............

- விலையுயர்ந்த வைரம், வைடூரியம்
  அல்லாது கற்றளிக்கோவிலாய்
  கல்லில் கலையை
  உயிர்ப்பித்திருக்கிறாய்.................

- பேருந்து, உயர்தொழில்நுட்பம்
  ஏதுமில்லா காலத்தில்
  உயிர்மெய் எழுத்தாம்
  இருநூற்றுப்பதினாறு
  அடி உயரத்தில் எண்பதுடன்
  கல்லை ஏற்றுவது
  எத்தனை தமிழனின்
  வியர்வைத்துளிகள் விலையாய்
  விதைக்கப்பட்டிருக்கும்.............

- அயல்நாட்டவரும்
  வியந்து நோக்கும்
  கட்டிடக்கலை
  தமிழனுடையது.............

- அயல்நாட்டவரின்
  நட்பையும், வணிகத்தையும்
  சிலையாய் முகம் கொடுத்திருக்கிறாய்.................

- தென்னாடுடைய பெருவுடையானுக்கு
  ஆலயம் அமைத்து
  சுற்றுப் பிரகாரங்களை
  மனநிறைவான முகத்தோடு
  எப்படி சுற்றிவந்திருப்பாய்
  இனியது ....
  அத்தருணம்.........

- ஈரச்சுண்ணாம்பில்
  இயற்கை சாயம் கொண்டு
  ஈசனின் திருவிளையாடல்களை
  ஓவியக்கலையாய்
  உயிர் கொடுத்திருப்பாய்
  பேரரசரின் உருவத்தை
  அங்கு மட்டுமே
  அறிய முடியும்..........................

- உயிர்மொழியாம்
  தமிழ்மொழியில்
  கோவில் பிரகாரங்களில்
  தானமாய் பெற்றதை
  நான் எனக்கூறாது
  நாம் கொடுத்தனவும் என
  வெளிப்படுத்தியிருக்கிறாய்..........

♦ கன்னித் தமிழ்போல்
இளமையோடு
உலகம் வியக்கும்
பெரியகோவில்.......
தமிழனின் மொழியோடு
வாழும் உயிர்க்கோவில்
பல யுகங்கள் கடந்தும்
வாழிய வாழியவே............
பிரகதீஸ்வரர் கோவில்....................

ம,அமிர்தா பிரகதீஸ்,
தேனி.